DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 142/2018

List of Witness : Lw2

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராணி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனிச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/03/2026

(எதிரிகள் ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் சின்னமண்டவாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 6,7 வருடங்கள் இருக்கும் தேதி சரியாக ஞாபகம் இல்லை. மாலை 4.30மணி இருக்கும். எங்கள் வீட்டின் முன்பு நின்று இருந்த வண்டியை தள்ளிவிட்டார்கள். எனது கணவரை கூட்டத்தில் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. எனது கணவர் அம்பிளிக்கை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். எனது கணவர் தற்போது இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடைய கணவர் பழனிச்சாமி உடையது. அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்து இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள எதிர்மனுதாரர் என்னும் இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சமாதான மனு **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். கடந்த 14.01.2018 ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு ஆஜர் எதிரிகள்

எங்கள் வீட்டின் முன்பு எனது கணவர் நிறுத்தி வைத்து இருந்த இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், அதை கேட்ட எனது கணவரை கையால் அடித்தார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும், சிகிச்சையில் இருந்த போது அம்பிளிக்கை போலீசார் விசாரணை செய்தபோது சம்பவம் தொடர்பாக எனது கணவர் பழனிச்சாமி புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டபடியால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.12 17:21:31 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 142/2018

List of Witness : Lw3

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கௌரிசங்கர் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சின்னமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/03/2026

(எதிரிகள் ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் பெரியகோட்டையில் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சுமார் 6,7 வருடங்கள் இருக்கும் பிரச்சனை நடந்தது. நான் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த எனது மாமா பழனிச்சாமியை பார்த்தேன்.வேறு எதுவும் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதை நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்காக செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். கடந்த 14.01.2018 ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு ஆஜர் எதிரிகள் அ.சா.1ன் வீட்டின் முன்பு நிறுத்தி வைத்து இருந்த இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், அதை கேட்ட அ.சா.1ன் கணவர் பழனிச்சாமியை கையால் அடித்தார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், பழனிச்சாமிக்கு ஏற்பட்ட காயத்திற்காக ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும், சிகிச்சையில் இருந்த போது அம்பிளிக்கை போலீசார் விசாரணை செய்தபோது சம்பவம் தொடர்பாக பழனிச்சாமி புகார்

வாக்குமூலம் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டபடியால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.12 17:21:37 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/03/2026